முருகப்பெருமான் துணை

**மகான் உருத்திரபசுபதி நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.05.2024**, வெள்ளிக்கிழமை

1. ஞானபலம் கொண்ட குருவே
ஞானியே ஆறுமுக அரங்கனே
தானதரும சக்திமிகு குருவே
தவசியே உன்பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குரோதி ஆண்டு தகர் திங்கள்
இருபான் திகதி புகரோன் வாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 20 ம் நாள், 03.05.2024, வெள்ளிக்கிழமை)
உருத்திர பசுபதி நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை நெறி காட்டும் ஞானி
ஞான தேசிகனாரை வேலவனாரும்
ஞாலமதில் தேர்வு செய்திருக்க
4. இருக்கவே கலிவாழ் மக்கள்
ஏற்றுமே அரங்க ஞானியை
கருத்தாக குருவே எனவணங்கி
கட்டாயம் சரணாகதி கொண்டு வர
5. வருகவே மக்களுக்கு மாற்றம்
வரமாக ஞானியர் வழி கிட்டி
தரும சிந்தை ஞான பலம் கூடி
தவபலமாக ஆற்றலும் பெருகி
6. பெருகியே உலகமக்களிடை மாற்றம்
பெருந்தயவாக தரும நெறியாக
முருகப் பெருமான் வழிபாடாக
முழுமை தரும் சக்தியுமாகத் தேறி
7. தேறியே எங்கும் அரங்கர் மயம்
தேசமெங்கும் புகழாகப் பரவ
வறுமை ஒழிப்புக் காலமாகி
வளமும் வல்லமையும் வள்ளல் தன்மையும்

8. தன்மையும் நிரம்பிய உலகாக
தனிப்பெருங் கருணை வடிவாக
நன்மை புரியும் சமூகமாக
ஞானவான்கள் பெருகிய வண்ணம்

9. வண்ணமுடன் ஞானத் தலைமை
வருகவே உலகமாற்றம் கண்டு
அண்ணல் அரங்கன் ஆசிபெற்ற
ஆளுமைகளாக உருவாகி இனிதே

10. இனிதே ஞானிகள் ஆட்சி
எந்த சிக்கலும் இல்லாத
கனிவேலவன் ஆளுமை தருகின்ற
கந்தமகா ஞான சபையாக

11. ஆகவே மனிதர்கள் தேடலெல்லாம்
ஆறுமுகன் வெளிப்பாடாகி
செகமாற்றம் உலகமாற்றம் காணும்
செப்பிய துல்லிய ஆசி முற்றே

–சுபம்–